# கலைஞரின் வரலாற்றுடன் கழக வரலாறும் இந்நூலில் இருக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

ஆனால், என்னை மட்டும், உங்கள் மகனை மட்டும் நீங்கள் சந்திக்க அனுமதி தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், அந்தச் சமயத்திலும் மற்ற கழகத் தோழர்கள் குடும்பங்களைச் சந்தித்த அனுமதித்த பிறகுதான் என்னுடைய மகனை நான் சந்திப்பேன் என்று தலைவர் கலைஞர் சொன்னார். கடைசியாகதான் என்னை வந்து சந்தித்தார்.

**உடன் பிறப்புகளை தன் உயிரினும் மேலாக மதித்தவர் கலைஞர்!**

அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களை நினைத்தாலே நம்முடைய உள்ளத்தில் ஒலிக்கின்ற குரல்..."என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே..." அது ஏதோ வார்த்தை அலங்காரம் இல்லை! உயிரினும் மேலானவர்களாக உடன்பிறப்புகளை மதித்தார் கலைஞர். இந்தப் புத்தகத்தில் நான் மட்டுமில்லை, தம்பி உதயநிதியும் இருக்கிறார்.

1977-ஆம் ஆண்டு சென்னை மத்திய சிறையில் இருந்து தலைவர் கலைஞர் எனக்கு எழுதிய கடிதத்தில், "1953-ஆம் ஆண்டு நான் திருச்சி சிறையில் இருந்தபோது நீ கைக்குழந்தை. உன் அம்மா தூக்கிக் கொண்டு வந்து சிறையில் காண்பித்தார்கள். இப்போதும் நான் சிறையில் இருக்கிறேன், உனக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான். அந்தப் பேரனும் என்னைப் பார்க்க சிறைக்கு வருவான்" இந்த அனுபவங்கள் எல்லாம் எவ்வளவு இனிமையானவை பார்த்தாயா! இந்தக் குடும்பத்தில் மட்டுமல்ல, நமது இயக்கமாம் இந்தப் பெரிய குடும்பத்தில் எத்தனையோ உடன்பிறப்புகளுக்கு இப்படிப்பட்ட சிறை அனுபவங்கள்.." வாய்க்கும் என்று எனக்கு எழுதினார். இதுபோல, பல செய்திகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது!

கலைஞரின் வரலாற்றுடன் கழக வரலாறும் இதில் இருப்பதைத்தான் இந்த நூலின் மிக மிகச் சிறப்பானதாக நான் கருதுகிறேன். "சோதனை எனும் நெருப்பில் புடம் போட்ட சொக்கத் தங்கமாக விளங்கும் வரலாற்றுக்கு உரிமை படைத்த ஒரு பேரியக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்" என்று எழுதி இருப்பதைப் படிக்கும்போது இந்த இயக்கத்தின் தலைவன் என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன்!

> கலைஞரின் வரலாற்றுடன் கழக வரலாறும் இதில் இருப்பதைத்தான் இந்த நூலின் மிக மிகச் சிறப்பானதாக நான் கருதுகிறேன். "சோதனை எனும் நெருப்பில் புடம் போட்ட சொக்கத் தங்கமாக விளங்கும் வரலாற்றுக்கு உரிமை படைத்த ஒரு பேரியக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்" என்று எழுதி இருப்பதைப் படிக்கும்போது இந்த இயக்கத்தின் தலைவன் என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன்!

**கலைஞரின் உடன்பிறப்புகள் என்பதைவிட நமக்கு வேறு என்ன பெருமை இருக்கிறது!**

இந்திய வரைபடத்தில் பெரிய எழுத்தில் குறிப்பிடப்படாத திருக்குவளை என்ற சிற்றூரில் பிறந்த கலைஞருக்கு இன்று இந்திய அரசே நாணயம் வெளியிடுகிறது என்றால், 'அத்தகைய புகழ்மிக்க தலைவரின் உடன் பிறப்புகள்தான் நாம்' என்பதைவிட, நமக்கு என்ன பெருமை வேண்டும்! அவருடைய புகழையும், பெருமையையும் அடுத்து வரும் தலைமுறைக்கு எடுத்துச் சொல்வதோடு, இனம், மொழி, மாநிலம் காக்க எந்நாளும் உழைப்பதுதான் தலைவர் கலைஞருக்கு நாம் காட்டக்கூடிய உண்மையான நன்றி!

**சூப்பர் ஸ்டாருக்கு நான் வழங்கும் உறுதிமொழி!**

என்றும் இறவாத தாய்க் கலைஞர் வாழ்க! வாழ்க! என வாழ்த்தி, எ.வ. வேலு அவர்களையும் மனதாரப் பாராட்டி, இந்த நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பு வைத்தது போல நம்முடைய சூப்பர் ஸ்டார் வருகை தந்து மனந்திறந்து என்னை ஊக்கப்படுத்தக்கூடிய வகையில், என்னைவிட ஒரு வயது கூட தான், அதனால் அறிவுரையும் சொன்னார். அவர் சொன்ன அத்தனையையும் நான் புரிந்துகொண்டேன். பயப்பட வேண்டாம். எதிலும் நான் தவறி விடமாட்டேன். எல்லாவற்றிலும் உஷாராக இருப்பேன் என்ற அந்த உறுதியை அவருக்கும் தெரிவித்து, அவருக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக அமைத்து நம்மையெல்லாம் பெருமைப்படுத்தியிருக்கக்கூடிய எ.வ.வேலு அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி, நன்றி, நன்றி

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

## எதையும் சிறப்பாகச் செய்யும் வல்லமை மிக்கவர் எ.வ.வேலு!



- **சென்னை, கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை**
- **மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்**
- **கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்**
- **திருவாரூரில் கலைஞர் கோட்டம் – ஆகியவை வேலுவின் திறமைக்குச் சாட்சியங்களாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது!**

**ஏன் அண்ணா அறிவாலயத்திலும், முரசொலி அலுவலகத்திலும் அமைக்கப்பட்ட கலைஞர் சிலைகளை அமைத்தவரும் அவர்தான். இவை எல்லாவற்றுக்கும் தலையாய சாதனைதான் கடற்கரையில் அமைந்திருக்கின்ற கலைஞர் உலகம் அதைத்தான் நம்முடைய சூப்பர் ஸ்டார் குறிப்பிட்டார்.**

**அதைப் பார்க்கிறவர்கள் எல்லோரும் வியந்து போகும் அளவுக்கு அதை அமைத்துத் தந்தவர் நம்முடைய வேலு அவர்கள். அவர் பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மட்டுமில்லை, கழகத்தைப் பொறுத்தவரைக்கும் சொல்லவேண்டும் என்றால், சிலைகள் துறை – மணிமண்டபங்கள் துறை – விழாக்கள் ஒருங்கிணைப்புத் துறை – சிறப்பு மலர்கள் தயாரிப்புத் துறை – புத்தகங்கள் அச்சிடும் துறை – நினைவுப் பரிசுகள் வழங்கும் துறை என்று எத்தனையோ துறைகள் வேலு அவர்களிடம்தான் இப்போது இருக்கிறது!**

**அதுமட்டுமல்ல, அவர் திரைப்படம் எடுத்திருக்கார் – கூத்து கட்டுவார் – சினிமாவிலும், நாடகத்திலும் நடித்திருக்கிறார். எத்தனை வேலைகள் கொடுத்தாலும், அவை அத்தனையும் சிறப்பாகச் செய்து காட்டும் வல்லமை வேலுவுக்கு உண்டு.**

---

மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

## சங்கரன்கோவிலில் மாணவர்களுக்கு விருதுகள்!

### கழக முன்னணியினர் பங்கேற்பு!

தென்காசி.ஆக.26-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அறிவுறுத்தலின்படி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் சங்கரன்கோவிலில் வடக்கு ரதவீதியில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் முப்பெரும் விழா நடைபெற்றது.இந்நிகழ்வில் அரசு பள்ளிகளில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்கள் உள்பட மொத்தம் 91 பேர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வடக்கு ரதவீதியில் சங்கரன்கோவில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு தி.மு.க.சார்பில் சங்கரன்கோவில் சான்றோர்களுக்கு விருது வழங்கும் விழா,அரசு பள்ளி,அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு விருது வழங்கும் விழா,தன்னார்வ தொண்டு அமைப்புகளுக்கு பாராட்டு விழா ஆகிய முப்பெரும் விழா நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட பொருளாளர் இல.சரவணன் பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி, சங்கரன்கோவில் ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கரபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நகர செயலாளர் மு.பிரகாஷ் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியை நகர துணை செயலாளர் முத்துக்குமார் தொகுத்து வழங்கினார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் கல்வித் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதை கருத்தில் கொண்டும்,மேலும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தை கொடுக்கும் வகையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற அரசு மேல்நிலைப்பள்ளி (கலிங்கப்பட்டி) அரசு மேல்நிலைப்பள்ளி (திருவேங்கடம்) உயர்நிலைப் பள்ளி (மைப்பாறை) அரசு உயர்நிலைப்பள்ளி (ஆலமநாயக்கர்பட்டி) அரசு உயர்நிலைப் பள்ளி (பெருங்கோட்டூர்) அரசு மேல்நிலைப்பள்ளி (சேர்ந்தமங்கலம்) அரசு மேல்நிலைப்பள்ளி (வெள்ளாளங்குளம்) புனித பீட்டர் உயர்நிலைப்பள்ளி(சேர்ந்தமரம்)அரசு உயர்நிலைப் பள்ளி (வென்றிலிங்கபுரம்) அரசு உயர்நிலைப் பள்ளி (பாண்டியாபுரம்)அரசு உயர்நிலைப்பள்ளி (குருவிகுளம்) கோ.நா.அரசு மேல்நிலைப்பள்ளி (குருவிகுளம்)அரசு உயர்நிலைப்பள்ளி (செவல்குளம்) அரசு உயர்நிலைப்பள்ளி (சாயமலை)அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி(சங்கரன்கோவில்)கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி (சங்கரன்கோவில்)36 கிராம சேனைத்தலைவர் மேல்நிலைப்பள்ளி (சங்கரன்கோவில்)அரசு மேல்நிலைப் பள்ளி(திருமலாபுரம்)அமல அன்னை உயர்நிலைப் பள்ளி(ரெங்கசமுத்திரம்) அரசு உயர்நிலைப்பள்ளி(மேலநீலித நல்லூர்)அரசு உயர்நிலைப் பள்ளி (பெரியகோவிலான் குளம்)ஆக மொத்தம் 21 பள்ளிகளில் பயின்று அதிக மதிப்பெண் பெற்ற 10 ம் வகுப்பு மாணவ,மாணவிகள் உட்பட 60 பேர்களுக்கும்,12 ம் வகுப்பு மாணவ, மாணவிகள் உட்பட 31 பேர்களுக்கும் ஆக மொத்தம் 91 மாணவ,மாணவிகளுக்கு பரிசு மற்றும் விருதுகளை வழங்கி பாராட்டினார்.

அதனைத் தொடர்ந்து சமூக சேவை செய்யும் சான்றோர்களுக்கு பசி இல்லா அறக்கட்டளை,புதிய பார்வை, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேசன்,பள்ளி முதல்வர், வாரியார் தாசன், தங்கம் தட்டச்சு பயிற்சியாளர்(10,500 பேருக்கு வேலை உருவாக்கிய)ஆசிரியர் மணி,சமூக வளர்ச்சி மன்றம்,ஓட்டல் உரிமையாளர் கள்,பொற்கொல்லர்கள்,மார்க்கெட் வியாபாரிகள் மற்றும் தன்னார்வ தொண்டு அமைப்புகளான மனிதநேயம் டிரஸ்ட், டாக்டர்.அப்துல் கலாம் ரத்ததானம் டிரஸ்ட், எஸ்.டி.பி. அமைப்பு, விண்மீன் குழந்தைகள் இல்லம் ஆகியவற்றை சார்ந்த சான்றோர்களுக்கும்,தன்னார்வ தொண்டு அமைப்புகளுக்கும் விருதுகளை வழங்கி அவர்களை கௌரவப்படுத்தி பாராட்டினார்.

நிகழ்வில் பசியில்லா அறக்கட்டளை சங்கரசுப்பிரமணியன், மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேசன் என்.கே.எஸ்.டி. சுப்பிரமணியன், டி.எஸ்.ஏ. சுப்பிரமணியன், பூபாலன், லட்சுமணன்,

கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர் பழனிசெல்வம்,தட்டச்சு ஆசிரியர் மணி,மனிதநேயம் அறக்கட்டளை பீர்மைதீன், சங்கர நாராயணசாமி கோவில் அறங்காவலர் குழு தலைவர் து.சண்முகையா, ஒன்றிய செயலாளர்கள் பெரியதுரை, ராமச்சந்திரன், பால்ராஜ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் சிவசங்கரி(மகளிர் அணி)அப்பாஸ் அலி (தொண்டரணி)

முருகன்(ஓட்டுனர் அணி)பசுபதி பாண்டியன் (பொறியாளர் அணி) பிச்சையா(வழக்கறிஞரணி) உதயகுமார் (மாணவரணி) காசிராஜன்(விளையாட்டு அணி)சந்திரன்(நெசவாளரணி) துணை அமைப்பாளர்கள் ராயல் கார்த்திக்,ராஜ், ராஜ ராஜன், அன்சாரி, கேபிள் கணேசன், ராஜவேல் ரத்தினம், சிவாஜி,வீரமணி,

மாவட்ட பிரதிநிதி செய்யதுஅலி,நகர துணை செயலாளர் சுப்புத்தாய், வாழைக்காய் கடை துரைப்பாண்டியன், காவல்கிளி உள்பட கழகத்தினர், பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சி நிறைவில் நகர அவை தலைவர் முப்புடாதி நன்றியுரையாற்றினார்.

இது போன்ற நிகழ்வை இதுவரை யாரும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கடலூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

கடலூர், ஆக. 256-

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், 24.08.2024,சனிக்கிழமை காலை 9 மணி முதல் சிதம்பரம் கடலூர் பைபாஸ் ரோடு வண்டிகேட் அருகே அமைந்துள்ள ஶ்ரீ கிருஷ்ணா கிராண்ட் மகாலில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, "என் உயிரினும் மேலான" கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி நடைபெற்றது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும்,கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை தாங்கி, சிறப்புரையாற்றி, வெற்றிப் பெற்ற மாணவமாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., கழக இளைஞரணி துணை செயலாளர் ப.அப்துல்மாலிக், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன்,மேயர் சுந்தரி ராஜா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரையில் இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற என் உயிரினும் மேலான எனும் தலைப்பில் நடைபெற்ற மாபெரும் பேச்சுப் போட்டியை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி தலைமை ஏற்று மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ தளபதி எம்எல்ஏ மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு மணிமாறன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ரகு மதுரை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்த போது எடுத்த படம் உடன் நிகழ்ச்சியின் நடுவர்கள் வே. மதிமாறன்,புதுக்கோட்டை விஜயா,பொள்ளாச்சி உமாபதி, சிவ ஜெயராஜ், மில்டன், இந்திரகுமார் தேரடி இளைஞர் அணி அமைப்பாளர்கள் இளங்கோ, சௌந்தர்ராஜன், விமல் துணை அமைப்பாளர்கள் வெற்றி மருதுபாண்டி ஐயப்பன் அன்புச்செல்வன் சுரேஷ் தமிழ் சந்திரன் ராம்பிரசாத் ஆதவன் அதியமான் குமரேசன் மற்றும் துணை அமைப்பாளர்கள் போட்டியில் பங்கேற்ற திரளான மாணவ மாணவியர் கழகத்தினர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்ட இளைஞரணி சார்பில் காரைக்குடியில் நடைபெற்ற 'என் உயிரினும் மேலான' பேச்சுப் போட்டியில் பங்கேற்ற கல்லூரி மாணவி. ஹரிதா ஶ்ரீ, கல்லூரி மாணவன் ஹரி சங்கர் ஆகியோரை பாராட்டி கூட்டுறவு துறை அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான கேஆர்.பெரியகருப்பன் சான்றிதழ் வழங்கினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், நடுவர் கம்பம் செல்வேந்திரன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் கு.பி.ராஜா, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், மேயர் எஸ்.முத்துதுரை, துணைமேயர் என்.குணசேகரன் மற்றும் பலர் உள்ளார்கள்.



நெல்லை மாநகர மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் மகளிர் உறுப்பினர் சேர்க்கை வட்ட பிரதிநிதி முத்துக்குமார், மகளிர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணவேணி ஏற்பாட்டில் மேகலிங்கபுரம் செல்வி அம்மன் கோவில் வளாகத்தில் தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல்கையும், பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை,வட்ட செயலாளர்கள் மேகை செல்வம், சடாமுனி,பிரேம் கணேஷ், மாமன்ற உறுப்பினர் கோகுல வாணி,மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மேரி உலகராஜ், மாநகர மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் பிந்துசெய்யது, ஆனி ரேக்லண்ட் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். நிகழ்வில் ஸ்டார் முருகன்,சிவா, காஜா மைதீன்,வின்சென்ட் வினோத்,ஷெட்டி,மகாராஜன், கிருஷ்ணகுமார்,சண்முகசுந்தர், கோட்டூர் மீரான்,சுப்ரித் சுப்பிரமணியன்,வினோத், விவேக்,கண்ணன் நைனா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.